Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 92/2024

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | பிரியா |
| Father's Name | : | அமிர்தராஜன் |
| Village | : | சித்துக்காடு |
| Age | : | **29/2025** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 19.08.2025**
(1, முதல் 6 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகா சித்துக்காட்டில் என்னுடைய தாயார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். 1வது எதிரி எனது கணவர் ஆவார் . எனக்கும் 1வது எதிரிக்கும் கடந்த 21.06.2021 அன்று திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு 1வது எதிரி மது குடிக்க மாட்டேன் என்று என்னிடம் உறுதிமொழி அளித்தார். ஆனால் திருமணத்தின் அன்றே வீட்டிற்கு 1வது எதிரி மதுபோதையில் வந்தார். திருமணத்திற்கு பிறகு தினமும் என்னை 1வது எதிரி கொடுமைப்படுத்தி வந்தார். தினமும் இரவு 12 மணியளவில் வீட்டிற்கு மதுபோதையில் வந்து 1வது எதிரி என்னை பார்த்து தேவடியா முன்டை என்று ஆபாச வார்த்தைகளில் பேசி என்னை சந்தேகப்பட்டு அடித்து கொடுமை படுத்துவார். 1மாதம் நான் கொடுமைகளை அனுபவத்த பின்னர் நான் என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு எனது குடும்பத்தார் என்னை சமாதானப் படுத்தி மீண்டும் என்னை 1வது எதிரி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். 19.03.2022 அன்று எனக்கு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் பெயர் மகிழ்மதி. குழந்தை பிறந்தவுடன் 1வது எதிரி குழந்தையை பார்த்து குழந்தை கருப்பாக உள்ளது. எனவே அந்த குழந்தை தனக்கு பிறந்தது இல்லை என 1வது எதிரி கூறினார். 3 மாதங்கள் கழித்து நான் மீண்டும் 1வது எதிரி வீட்டிற்கு சென்றபோது 1வது எதிரி மற்றும் எனது மாமியார் 2வது எதிரி ஆகியோர் எனது உடல்நிலையை கருத்தில் கொள்ளாமல் என்னை கொடுமைப்படுத்தினர். திருமணத்தின்போது எனது பெற்றோர் 1வது எதிரிக்கு 45 பவுன் தங்க நகை மற்றும் மரப்

பீரோ, மரக்கட்டில், மெத்தை உணவு அருந்தும் மேசை , 50 இஞ்ச் ரெட்மி டிவி, பிரிஜ், மின்விசறி , நாற்காலி, மற்றும் வீட்டிற்கு உபயோகபடுத்தும் பொருட்கள் உள்பட ஆறு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் மற்றும் கார் வாங்குவதற்காக ரூபாய் நான்கு லட்சம் ஆகியவற்றை கொடுத்தார்கள். குழந்தை பிறந்தபோது 1வது எதிரிக்கு எனது பெற்றோர் வெள்ளி பொருள்கள், நகைகள் ஆகியவற்றை கொடுத்தார்கள். இவை போதாது என்று எதிரிகள் அனைவரும் என்னை கொடுமைபடுத்தினார்கள். இன்னும் நகை மற்றும் பணத்தை எனது பெற்றோரிடமிருந்து வாங்கி வரும்படி என்னை கட்டாயப்படுத்தி எதிரிகள் என்னை கொடுமைபடுத்தினார்கள். எனது கணவருக்கு 2வது திருமணம் செய்து வைப்பதாக 2வது எதிரி என்னிடம் கூறினார். நான் எனது மாமியார் 2ஆம் எதிரி அலைப்பேசியை எடுத்து பார்த்தபோது 1வது எதிரி அவரது கடையில் வேலை செய்யும் நர்மதா என்னும் பெண்ணும் தகாத முறையில் பேசி கள்ள உறவு இருந்தது தெரிய வந்தது. இந்த விசயத்தை எனது கணவரின் குடும்பத்தாரிடம் நான் கூறியபோது அவர்கள் 1வது எதிரியை கண்டித்தார்கள். இதனால் கோபம் அடைந்த 1வது எதிரி என்னிடம் பிரச்சனை செய்தார். என்னை பார்த்து 1வது எதிரி தேவடியா என ஆபாச வார்த்தை பேசினார். இனிமேல் திருந்திவிடுவேன் என 1வது எதிரி உறுதி கூறினார். ஆனால் அந்த பெண்ணுடன் 1வது எதிரி மீண்டும் தொடர்பில் இருந்தது தெரியவந்தது. 1வது எதிரிக்கு சிகரெட் மற்றும் கஞ்சா அருந்தும் பழக்கம் இருந்தது. இதை நான் கண்டித்ததால் 1வது எதிரி என்மீது கோபம் கொண்டு வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னார். 1வது எதிரியின் கொடுமை தாங்காமல் பூச்சிகொல்லி மருந்தை எடுத்து குடித்து விட்டேன். நான் வாந்தி எடுத்ததை பார்த்த பக்கத்து வீட்டார் என்னை கைகாட்டியில் உள்ள மகாலிங்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். எதிரிகள் என்னை வந்து பார்க்கவில்லை. அதன்பிறகு எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். 3 மாதங்கள் நான் என் அம்மா வீட்டில் இருந்தேன். 1வது எதிரி 2வது திருமணம் செய்துகொள்ளபோவதாக எனக்கு தகவல் கிடைத்ததால் 28.03.2023 அன்று நான் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். விசாரணையின்போது 1வது எதிரி எனக்கு விவாகரத்து அளிக்கபோவதாக கூறினார். விசாரணையின்போது எனது பெற்றோர்கள் 1வது எதிரிக்கு வரதட்சணை மற்றும் சீர்வரிசை பொருட்கள் கொடுத்ததை 1வது எதிரி ஒப்புக்கொண்டார். விசாரணைக்கு பிறகு என்னை வாழ வைக்கும்படி போலிசார் கூறினார்கள். பிறகு 1வது எதிரியுடன் சேர்ந்து 35 நாட்கள் குடும்பம் நடத்தினேன்.

அதன் பிறகும் 1வது எதிரி மாறவில்லை. என்னையும் எனது குழந்தையையும் தனியாக விட்டுவிட்டு எதிரிகள் வெளியூருக்கு சென்றுவிடுவார்கள். மீண்டும் எதிரிகள் என்னை கொடுமைப்படுத்தியதால் நான் மீண்டும் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அப்போது எனது நாத்தனார் 6ஆம் எதிரி என்னை பார்த்து தேவடியா முன்டை என தகாத வார்த்தை பேசி காவல் நிலையத்திலேயே என்னை அசிங்க படுத்தினர். மீண்டும் என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டேன். பஞ்சாயத்தார்கள் மூலம் பேசியபோதும் எதிரிகள் சமாதானத்திற்கு உடன்படவில்லை. என்னுடைய 27 பவுன் தங்க நகை மாங்காடு I.O.B வங்கியில் எனது பெயரில் 1வது எதிரி அடமானம் வைத்திருந்தார். அந்த நகைகளை 03.02.2024 அன்று திருப்பி தருவதாக 1வது எதிரி கூறினார். அந்த நகைகளை திருப்பிய பின்னர் 1,3,4 எதிரிகள் நகைகளை பெற்று சென்றனர். ஆனால் இன்றுவரை அந்த நகைகளை திருப்பி கொடுக்கவில்லை. விவகரத்து கொடுத்தால்தான் நகைகளை திருப்பி கொடுப்பேன் என 1வது எதிரி கூறினார். நகைகளை கொடுத்து விட்டதாக எதிரிகள் கூறி ஒரு பத்திரத்தில் கையொப்பம் கேட்டனர். நான் மறுத்தபோது எதிரிகள் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் உன்னையும் உன் குடும்பத்தையும் தூக்கில் தொங்கவிடுவோம் என எதிரிகள் கூறினார்கள். கடந்த 23.05.2024 அன்று நானும் எனது அப்பா தனசேகரன், எனது அம்மா ஜெயா ஆகியோர் எதிரிகளின் வீட்டிற்கு சென்று எனது நகைகளை திரும்ப கேட்டபோது 1 மற்றும் 3 எதிரிகள் அரிவாளை கொண்டு எனது தந்தையின் தலையில் வெட்டினார்கள். 08.05.2024 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் புதுக்கோட்டை அவர்களுக்கு புகார் மனு அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு என்னுடைய கையெழுத்துதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.